30—

தடுப்பு அணை

***42412—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி ஒன்றியம், கூடமுடையார் கோவில் அருகில் அர்ஜுனா நதியில், தடுப்பு அணை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி ஒன்றியம் கூடமுடையார் கோவில் அருகில், அர்ஜுனா நதியில், தடுப்பு அணை கட்டும் திட்டம் அரசின் நிதி நிலைக்கேற்ப செயற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

திரு. எஸ். தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் சட்டமன்றத் தொகுதி, சிவகாசி யூனியன், எம். புதுப்பட்டி அருகே அர்ஜுனா நதி ஓடுகிறது. அதன் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டினால், அதன் மூலம் காளையார்குறிச்சி, எம். புதுப்பட்டி, நெடுங்குளம் ஆகிய மூன்று பஞ்சாயத்துகளிலும் சுமார் 200 ஏக்கர் தரிசு நிலங்கள் நன்செய் நிலங்களாக மாறும். இதைக் கணக்கிலேகொண்டு, இந்த வறட்சியான பகுதியிலே, இந்தத் தடுப்பணையை விரைவில் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஒன்றியம், கூடமுடையார் கோவில் அருகில் அர்ஜுனா நதியின் குறுக்கே தடுப்பணை கட்டுவதன் மூலம் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலத்தடி நீரை உயர்த்த இயலும். மேலும் தடுப்பணை கட்டுவதன் மூலம் ஒரு மில்லியன் கன அடி நீரைத் தேக்கலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூபாய் 70 இலட்சம் ஆகும். மேலும், இங்கு தடுப்பணை கட்டுவதால் அதன் கீழ்ப் பகுதியில் உள்ள பாசன நிலங்கள் பாதிப்படையாது என்று ஆய்வறிக்கை*

TRUTH ALONE TRIUMPHS

2005 பிப்ரவரி 3]

கூறுகிறது. வருங்காலத்தில் அரசின் நிதிநிலைக்கேற்ப இத்திட்டம் முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை நான் 2001-லிருந்தே தொடர்ந்து வைத்து வருகிறேன். தயவுகூர்ந்து, அமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்த்து, இந்த அணையைக் கட்டுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கட்டப்படும் என்று சொல்கிறார். பிறகு ஏன் அமைச்சரைத் தொந்தரவு செய்கிறீர்கள்?

திரு. எஸ். தாமோதரன்: 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

31—

சார்நிலை துணைக் கருவூலம்

***2592—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைமையிடத்தில், சார்நிலை துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலைப் பளு, work load, குறைவாக இருக்கிற காரணத்தினாலும், போதிய பணியாளர்கள் அங்கு இல்லாத காரணத்தினாலும், பாப்பிரெட்டிப்பட்டி ஒரு வட்டத் தலைமையகமாக இருந்தபோதிலுங்கூட, அங்கு கருவூலம் அமைக்கின்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.